**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் வழங்கப்படும் சிற்றுண்டி வகைகளில், "அரிசி அல்லது ரவை உப்புமா"விற்குப் பதிலாக, "பொங்கல் மற்றும் காய்கறி சாம்பார்" என மாற்றி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (நிலை) எண்.58

நாள் 29.05.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, வைகாசி 15

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 27.07.2022.
2. அரசாணை (நிலை) எண்.1, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 13.01.2023.
3. அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 07.06.2023.
4. அரசாணை (நிலை) எண்.17, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 11.03.2024.
5. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.3652/சஉதி–2/2023, நாள் 16.09.2024.
6. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.654153/சஉதி–2(1)/ 2025, நாள் 28.04.2025.

------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை) பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலை உணவு வழங்கிடும் பொருட்டு, முதற்கட்டமாக முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தி ஆணையிடப்பட்டது.

2. பின்னர், மேலே இரண்டு முதல் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், தமிழ்நாட்டில் நகர்புறப் பகுதிகள் (மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுப்படுத்தி ஆணையிடப்பட்டது.

த.பி.பா

3. மேலே ஐந்து மற்றும் ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் (CMBFS) வழங்கப்படும் சிற்றுண்டி வகைகளில் மாற்றம் செய்வது தொடர்பாக, ஊட்டச்சத்து வல்லுநர் குழு மற்றும் திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனங்களால் அளிக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையிலும், குழந்தைகளின் விருப்பத்திற்கேற்பவும், வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் தற்பொழுது வழங்கப்படும் உப்புமா வகைகளுக்குப் பதிலாக, பொங்கல் மற்றும் காய்கறி சாம்பார் வழங்கிட உரிய ஆணை வழங்குமாறும், இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1,80,38,000/- (ரூபாய் ஒரு கோடியே, எண்பது இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்)-ஐ, 2025-2026-ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ளவும், நிதி ஒதுக்கீட்டிற்குமேல் கூடுதல் நிதி தேவைப்பட்டால், அதனை 2025-2026 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய ஒதுக்கீட்டில் பெற்றுக்கொள்ளவும் அனுமதி அளிக்குமாறு சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே படிக்கப்பட்ட சமூக நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரீசிலனை செய்தது. அதன் அடிப்படையில்,

i. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் தற்பொழுது வழங்கப்படும் **அரிசி அல்லது ரவை உப்புமா வகைகளுக்குப்** பதிலாக, குழந்தைகளின் விருப்பத்திற்கேற்ப, **பொங்கல் மற்றும் காய்கறி சாம்பார்** வழங்கிடலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

ii. மேலும், இதன்பொருட்டு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1,80,38,000/- (ரூபாய் ஒரு கோடியே, எண்பது இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்)-ஐ ஒப்பளிப்பு செய்தும், அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் உரிய கணக்குத் தலைப்புகளின் கீழ் மேற்கொள்ளுமாறு சமூக நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித்துறையின் மின் அலுவலக எண்.9169008/நிதி (சந)/2025, நாள் 28.05.2025-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,
சமூக நல ஆணையர், சென்னை-5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
இயக்குநர், நகராட்சி நிர்வாகத் துறை, சென்னை-28.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை-34.

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II), சென்னை–18.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.

நகல்.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச் சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (ச.ந.) த்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/05/2025

பிரிவு அலுவலர்

29/05/25